செய்தி வெளியீடு எண்.422 நாள்.7.7.2011

**மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிடர் மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த ஜுலை 7–ஆம் தேதியை அரசு விழாவாக கொண்டாட ஆணை பிறப்பித்திருந்தார்கள். . இதனை தொடர்ந்து இன்று (7.7.2011) இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாள் விழா அரசு சார்பில் நடைபெற்றது.**

**இரட்டைமலை சீனிவாசன் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.**

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிடர் மக்கள் முன்னேற்றத்திற்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்த இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பிறந்த ஜுலை 7–ஆம் தேதியை அரசு விழாவாக கொண்டாட ஆணை பிறப்பித்திருந்தார்கள். இதனை தொடர்ந்து இரட்டைமலை சீனிவாசன் பிறந்த தினமான இன்று (7.7.2011) சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்திலுள்ள, அவரது மணிமண்டபத்தில் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து அவரது திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். இவ்விழாவில், மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வுத் துறை அமைச்சர் திரு.நத்தம் ஆர் விஸ்வநாதன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு.சொ.கருப்பசாமி, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.கே.டி.பச்சைமால், மாண்புமிகு இந்து அறநிலையத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி. சண்முகநாதன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.டி.கே.எம்.சின்னையா, மாண்புமிகு சிறப்புப்பணிகள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத், மாண்புமிகு செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு.ஜி.செந்தமிழன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திருமதி கோகுலஇந்திரா, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நலத்துறை அமைச்சர் திரு.என்.சுப்பிரமணியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.ஏ,முகமது ஜான், மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.எஸ்.டி. செல்லபாண்டியன் ஆகியோரும், சட்டமன்ற உறுப்பினர் திரு.செ.கு.தமிழரசன் அவர்கள், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.டி.என்.ராமனாதன், இ.ஆ.ப., இயக்குநர் செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு சிறப்புச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம், இ.ஆ.ப. மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.